# புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி

2019 ஆடி மாதம் 15ம் திகதி தொடக்கம் 21ம் திகதி வரை

## *“பழைய ஏற்பாட்டில் மக்களுக்கு இறைவன் அருளிய தந்தை தாய் அன்பு”*

01. ஆரம்ப புகழ்ச்சி : புபுது பாடல் இல. 118 “….”
02. புகழ்ச்சிக்கான அறிமுகம்:

- இறைவன் எவருக்கும் எதற்கும் சமப்படுத்த முடியாத வரையரையற்றவராவார். அவ்வாறு சமப்படுத்த முடியாத காரணம் அவரே அனைத்தினதும் படைப்பாளரான இறைவனாய் இருப்பதுவே. இறைவன் மாறுபட்டவர், அம் மாறுப்பட்ட தன்மையை மனித மனதினால் புரிந்து கொண்டிட முடியாது. அவரது ஒரே பேறான மகனை யோர்தான் நதியில் அன்பார்ந்த மகனாக ஏற்றுக் கொண்டு தன் மகனின் உடலை சிலுவையில் பலியாக ஒப்புக்கொடுத்தல், தந்தை மகனுக்கு அவ்வாறு நடக்க இடமளித்தல், என்பதை மனித மனதினால் எவ்வாறு புரிந்து கொள்ள முடியும். அவர் இறைவனாவார்.
- உயிர்த்த ஞாயிறு நிகழ்ந்த பயங்கரவாத செயலை நடாத்திட இறைவன் இடமளித்தார். அவ்வாறான நிகழ்ச்சி அவ்வாறாக அத்தகைய நாளில் நடந்தது ஏன் என எம்மால் அவரிடம் கேள்வி கேட்க முடியாது. அன்பான இறைவன் அந்த நிகழ்வினூடாக அவரது பரிசுத்தமான விருப்பம் நிறைவேற இடமளித்தார். அது இறைவனின் உள்ளமாகும். இறைவனின் செயல்பாடு உங்கள் திட்டம் என் திட்டம் போன்றதல்ல. உங்கள் எண்ணங்கள் என் எண்ணங்கள் போன்றதல்ல.
- அவ்வாறாக மகா வல்லமையானவரின், மகோன்னத இறைவனின் பிள்ளைகளாகுவதற்கு நாம் பெற்றுள்ள வரமானது எவ்வளவு மேன்மையானது. அத்தகைய மேன்மையை பெறுமதியை எமக்குத் தந்த அப்பா தந்தையை அப்பா அன்னையை புகழ்வோம். வணங்குவோம்.
- புபுது பாடல் இல. 42 “வானம் பூமி…” பாடலைப் பாடியவாறு ஆழமான புகழ்ச்சிக்கு உள்ளாவோம்.

03. நாளுக்குரிய நற்செய்தி :-

- பூமியில் வளரும் அதி விசாலமான மரமாயினும், மன்னில் மிதிபடும் சிறு செடியாகினும் பலன் கொடுப்பதற்கு நாம் அறிந்த விதத்தில் ஆண் பெண் பரிமாற்றம் தேவையாகும். விளங்கு உலகிளும் மிகவும் சிறிய மிருகம் தொடக்கம் யானை போன்று பெரிய மிருகங்கள் வரையும் அவர்களுடைய நிலைபாடு தங்கி இருப்பது ஆண் பெண் இருவரினதும் ஒன்றினைதலேயாகும். அது அகிலத்தின் படைப்பாளரின் நியதியாகும். பரிசுத்தமான திட்டமாகும். “அது நல்லது என கடவுள் கண்டார்.”
- மனிதனை படைக்கையில் இறைவன் மனித படைப்பிற்குள் உள்ளாகியது தமது இறை சாயலேயாகும். அச் சாயல் தந்தை – தாயின் சாயலாகும். முதல் மனிதனின் தந்தையும் தாயும் ஆகியவாறு இறை சாயலின் தந்தையின் தாயின் இலட்சணங்கள் படைப்பினுள் உள்ளாக்கினார். தமது சாயலாக படைத்த ஆணினுள் ஒழுங்கமைப்பு, வல்லமையும் பெண்ணினுள் சௌந்தர்த்தையும் மறைரகசியமான நிலையும் உள்ளாகியது அவ்வாறேயாகும்.
- தனது சுயநலத்தினாலேயே இறை புத்திரதன்மையை இழந்த மனிதன் படைப்பாளராம் இறைவனைப் பற்றி புரிந்து கொண்டது தவறான விதத்திலேயே. அன்பே உருவான அப்பா தந்தையை பயங்கரமான, பழிவாங்கும், தண்டனை கொடுக்க பார்த்திருக்கும் இறைவனாக அறிந்து கொண்டாலும் மனிதன் தனிமையாக தூர விலகி பயணம் செல்கையில், கீழே விழுகையில், பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கையில் அவனுக்கு உதவிட இறைவன் அவனைத் தேடி வந்து, தந்தையாக தாயாக பின் தொடரும் அன்பினால் அன்பு செய்திடும் இறைவனாக தன்னை வெளிப்படுத்தகிறார்.
- புறக்கணித்து சென்ற தனது பிள்ளைகள் துக்கப்படும் போது தனது தந்தை – தாய் அன்பினை அவர்களுக்கு புரிய வைத்திட பல்வேறு தூதர்களை தீர்க்கதரிசிகளை அவர்கள் மத்தியில் அனுப்பி அதனூடாக தனது அன்பினை புரிய வைத்து அவர்களை நேரிய வழியில் நடாத்திட பாடுபடும் விதத்தினை ஒசேயா, எசாயா போன்ற தீர்க்கதரிசிகளின் வார்த்தை வழியாக தெளிவாகிற்று.
- ை. ஒசேயா 11:1-4 ைை. ஏசாயா 66:7-13 ைைை. ஏசாயா 40:11 எனும் பகுதிகயில் பழைய ஏற்பாட்டு மக்களுக்கு இறைவன் வெளிப்படுத்திய தந்தை – தாய் அன்பினை அனுபவியுங்கள்.
- அவர்களுக்கு மிகவும் தெளிவாக அனுபவத்தை கொடுத்து தனது அன்பினை வெளிப்படுத்தகிறார். ஏசாயா 49:15 “பால் குடிக்கும் மகவைத் தாய் மறப்பாளோ” பழைய ஏற்பாட்டு மக்களுக்கு இறைவன் காட்டிய தந்தை தாய் அன்பினை நீங்கள் அனுபவிக்கும் விதத்தினை பகிரவும்.

- வூரம் முழவதும்.
    - இவ்வுலகில் எவருக்கும் நான் பெறுமதியற்றவனாக இருப்பினும் படைத்தவருக்கு நான் மிகவும் பெறுமதியான ஒருவன். நாள் முழவதும் எனது பெயரை தனது உள்ளங்கையில் பொறித்து நினைவில் கொள்ளுமளவிற்கு நான் பெறுமதிமிக்கவர். அதனை எமது வாழ்வின் உள்ளாந்திரத்திற்கு உணரும் விதமாக உரிமையாக்கிக் கொள்வோம்.
    - ஒருநாளும் ஒரு பொழுதும் நான் தனிமையுற மாட்டேன் என்று நடைமுறையில் அனுபவித்திட முயல்வோம். அதற்காக செபிப்போம்.
    -

06. இறுதிச் பகழ்ச்சி :

- புபுது சிங்கள பாடல் இல 376 “உரிமையாக்கிக் கொள்கிறேன்…..”